**செ.வெ.எண்.165** **நாள் : 12.12.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சியால் வர்தா புயலின்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலாளர் திரு.கே.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

வர்தா புயலை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–9, நொச்சிக்குப்பம் மழலையர் பள்ளியில் நடைபெற்று வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை முதன்மைச் செயலாளர் திரு.கே.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பார்வையிட்டு இன்று (12.12.2016) ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, மண்டலம்–9, நொச்சிக்குப்பம் மழலையர் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவினையும், மழைக்காலங்களில் நோய் தொற்று ஏற்படாமல் இருப்பதற்காக மருத்துவ முகாம் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலவேம்பு குடிநீர், தடுப்பூசி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வுக்குப்பின் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து போதுமான வசதிகளை ஏற்படுத்தி வழங்கியுள்ளார்கள். அவர்கள் வழங்கிய வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகளின்படி, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழக அரசு வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டும், வர்தா புயலை எதிர்கொள்ளும் வகையிலும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் நிலையில் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 176 முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, தற்போது 30 முகாம்களில் 600 பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு அம்மா உணவகங்கள் மற்றும் நான்கு பொது சமையற்கூடங்கள் மூலமாக உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியை சேர்ந்த 18000 பணியாளர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களின் அடிப்படையில் உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சாலைகளில் விழும் மரங்கள் அகற்றப்பட்டு வருகிறது. மழைநீர் தேங்குவது கண்டறியப்பட்டால் உடனடியாக அகற்ற சூப்பர் சக்கர் இயந்திர வாகனம் அனுப்பப்பட்டு மீட்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய பேரிடர் மேலாண்மை குழுவினர் நான்கு இடங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். தேவை ஏற்படின் மீட்புப் பணியின் போது பயன்படுத்தப்படும். 70 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. 652 மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டு, தற்போது 78 பம்புகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மழைநீர் தேங்கிய 204 இடங்கள் கண்டறியப்பட்டு, 69 இடங்களில் மழைநீர் அகற்றப்பட்டு 135 இடங்களில் மழைநீர் அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

235 புகார்கள் தொலைபேசி, கைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக பெறப்பட்டு 203 புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 32 புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய்களில் ஏதேனும் உடைப்பு ஏற்பட்டால் உடனுக்குடன் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் லாரிகள் வாயிலாகவும் பாதுகாப்பான குடிநீரை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள 22 சுரங்கப்பாதைகளில் தண்ணீர் தேங்காமல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சீரான வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாமல் தடுப்பதற்காக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, தடுப்பூசி மற்றும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், கழிப்பிட வசதி, மின்வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் புயல் கரையை கடக்கும் போது வெளியில் செல்ல வேண்டாம் எனவும், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் அருகில் உள்ள நிவாரண முகாம்களுக்கு செல்லுமாறும், மரங்களின் கீழ் வாகனங்கள் நிறுத்துவதையும், தங்குவதையும் தவிர்க்க வேண்டும். மேலும், தமிழக அரசு தற்போது உருவாகியுள்ள வர்தா புயலை எதிர்கொள்ள அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஆகையால், பொதுமக்கள் எவ்வித அச்சமோ, பயமோ கொள்ள தேவையில்லை என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் மற்றும் சிறப்பு செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், 9வது மண்டல கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**